Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 20 (03-03-1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 14

## வெளிவாரி பட்டப்படிப்பு;
## சங்கீத ஆசிரியர்களுக்கும் அனுமதி வழங்க முடிவு

வட மாகாண சங்கீதசபையின் ஆசிரிய தரச் சான்றிதழ் இந்திய பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைச் சான்றிதழ் ஆகிய தராதரமுள்ளவர்களை வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு அனுமதிக்க யாழ். பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது. மேற்படி தராதரமுள்ளவர்களை வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு அனுமதிக்க வேண்டுமென்ற இலங்கைத் தமிழர் (6 ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரி
# இலங்கை, இந்தியா விஜயம்

## தமிழ் அகதிகள் மீதான அடக்குமுறையை நேரில் கண்டறிவது நோக்கம்

(கொழும்பு)

இலங்கையிலும், இந்தியாவிலும், தமிழ் அகதிகளின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதையும், அகதிகள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதையும் நேரடியாக அவதானித்து அறிந்து கொள்வதற்காக அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் ஜெனிவா தலைமையக உயர் அதிகாரி ஒருவர் அடுத்த வாரம் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆசியநாடுகளில் அகதிகளின் நலன்களுக்குப் பொறுப்பாக இந்த அதிகாரி கடமையாற்றி வருகிறார்.

இலங்கையிலும், இந்தியாவிலும் தமிழ் அகதிகள் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் கடந்த பல மாதங்களாக நடாத்தப்பட்டு வருவதையும், இவ்விரு நாட்டு அரசுகள் தமது அரசியல் இலக்குகள் சிலவற்றை அடைந்து கொள்வதற்காக அகதிகளாக உள்ள இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை சில வற்புறுத்தல்களுக்கு உட்படுத்துவதையும் நேரடியாக அவதானித்து அறிந்துகொள்வதற்காகவே இந்த அதிகாரி மேற்படி இரு நாடுகளுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்.

இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருக்கும் சுமார் (6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்
### கப்டன் காண்டீபன் சக்கரபாண்டியன்

வவுனியா மாவட்டத்தில் உள்ள தவசியாகுளத்தில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது கப்டன் காண்டீபன் (கணபதிப்பிள்ளை நாகரத்தினம் - சாஸ்திரி குளம், வவுனியா) என்ற போராளி வீரச்சாவு அடைந்தார்.

குளத்தில் குளித்துக்கொண்டிருந்தபோது நீரில்மூழ்கி விடுதலைப்புலிகளின் போராளி (6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி படை துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

பூநகரி கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு அரியாலை கிழக்குப்பக்கமாக 50 கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

## பீரங்கித் தாக்குதல்

(குருநகர்)

நேற்றுமுன் தினம் இரவு 8 30 மணியளவில் பூநகரி கல்முனைப் பகுதிக்கடலில் தரித்து நின்ற சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகிலிருந்து கரையோரப்பகுதிகளை இலக்கு வைத்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன வென்று அறிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலையில் அப்பகுதியில் இருந்து கடற்றொழிலாளர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (21)

## தபாலக ஊழியர் மூவரின் காசோலைமோசடி அம்பலம்

யாழ். பிரதான அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றும ஊழியர்களான திரு. க. திருச்செல்வம், திரு. இ. விஜயமோகன், திரு ஐ. முருகதாஸ் ஆகியோர் பொதுமக்களுக்குரிய காசோலைகளைமோசடி செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக பொதுமக்களாலும், சக ஊழியர்களாலும் கொடுக்கப்பட்ட தகவல்களைக்கொண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகள் மூலம் இவர்களின் மோசடிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட மூவரும் கடந்த மாதம் 27ஆம் திகதி காலை 10.30 மணியளவில் சக ஊழியர்கள், அதிகாரிகள் முன்னிலையில் அவர்களது அலுவலகத்தில் வைத்து அவர்களின் மோசடிகள் அம்பலப்படுத்தப்பட்டபின் தமிழீழ விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டனர்

## கொம்படியில்
## பயணிகளிடம் திருடியவர் காவல்துறையினரால் கைது

(நமது நிருபர்)

கொம்படிப் பகுதியில் கொழும்புப் பயணிகளிடம் திருட்டில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் சாவகச்சேரி காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் பதினைந்தாம் திகதிக்கும் இருபத்தோராம் திகதிக்குமிடையில் கொழும்பு பிரயாணி ஒருவரிடமிருந்து திருடப்பட்ட பெறுமதிமிக்க பொருள்கள் அடங்கிய பயணப்பை ஒன்றும் மேற்படி நபரிடமிருந்து காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது இப்பயணப்பையைப் பறிகொடுத்த பிரயாணி தகுந்த அடையாளம் காட்டித் தம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் என சாவகச்சேரி காவல்துறை பணிமனை அறிவித்துள்ளது.

## சமாந்தரமாகச் செல்வோர்; குற்றப்பணம் அதிகரிப்பு

(நமது நிருபர்)

சமாந்தரமாகச் செல்லும் சைக்கிள் பயணிகளிடம் அறவிடப்பட்டுவந்த குற்றப்பணம் இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அறிவித்துள்ளார்.

கடந்த பல மாதங்களாக யாழ். மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்தமையும் இதனால் பலர் அங்கவீனமடைந்ததுடன் சிலர் இறந்தமையும் தெரிந்ததே. இதனைத் தொடர்ந்து பல பொதுமக்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு இணங்க காவல் துறையினர் வீதி ஒழுங்கைமீறும் வாகனச் சாரதிகளிடம் ஸ்தலத்தில் வைத்தே குறிப்பிட்ட தொகையைக் குற்றப்பணமாக அறவிட்டு வந்தனர்.

இவ்விபத்துக்களை மேலும் கட்டுப்படுத்தும் நோக்குடன் சமாந்தரமாகச் சைக்கிள்களில் செல்வோரிடம் அறவிடப்படும் குற்றப்பணத்தைக் கடந்த வாரம் முதல் பத்து ரூபாவாக உயர்த்தியுள்ளதாகத் தெரிவித்த காவல்துறைப் பொறுப்பாளர் இதன் பின் விபத்துக்கள் பெருமளவில்குறைந்துள்ளதாக மேலும் தெரிவித்தார். (ச, க)

## வவுனியாவில் தொடர்ந்தும் புலிகள் - ராணுவம் மோதல்

(வவுனியா)

வவுனியாவின்பல்வேறு முனைகளிலும் முன்நேற முயலும்சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் சிறிலங்கா இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சிகள் பெருமளவில் தடைப்பட்டுவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தவசியன் குளம் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

இவர்களின் தாக்குதல் நடந்துகொண்டிருந்த வேளையில் சிறிலங்கா அரசுக்கு சொந்தமான உலங்குவானூர்தி யொன்று அப்பகுதியில் தரையிறங்கிச் சென்றது புலிகளின் தாக்குதலால் நிலைகுலைந்த சிறிலங்கா இராணுவம் பொதுமக்களின் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் புலிகளுக்கு எதிராக இரு இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டுவருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘ஒப்பரேசன் றேசர்’ என்பதும் தொப்பிகலை காட்டுக்குள் ‘ஒப்பரேசன் அந்தேகர்’ என்பன அவையாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வாழைச்சேனை பகுதியிலுள்ள பெண்டுகள் சேனையில் 20 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் புலிகளின் அதிரடியினால் கொல்லப்பட்டதை யடுத்து இந்த இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக தெரியவருகிறது.

### அன்னை பூபதி பொது அறிவு பரீட்சை

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் அன்னை பூபதி நினைவாக நடாத்தும் பொது அறிவுப் பரீட்சை 15-3-92 நடைபெற உள்ளது.

## இந்திய மீனவர் மீது சூடு; ஒருவர் படுகாயம்

(வேதாரணியம்)

வேதாரணியமருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர் இதனால் ஒரு மீனவர் படுகாயமடைந்தார். இந்தச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சிறிலங்கா கடற்படையினர் மீனவர்களைத் தாக்கி அவர்களிடமிருந்த மீன்களை பறித்துச் சென்று விட்டதாகவும் வேதாரணியம் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

# ஐ. நா. மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு?

## அவுஸ்திரேலிய ஜனநாயக கட்சி வற்புறுத்து

(சிட்னி)

சிறிலங்கா அரசு ஐ. நா. நிறுவனத்தையும் அதன் கிளை அமைப்புகளையும் நாட்டிற்குள் வரவழைத்து இப்போது நடைபெறும் போருக்கு ஒரு சமாதானத் தீர்வுகாண வேண்டும் என அவுஸ்ரேலியா ஜனநாயகக்கட்சியின் சார்பில் வெளியுறவுப் பேச்சாளர் செனட்டர் விக்கி போக்கை வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் நியூசவுத் வேல்ஸில் ஈழத் தமிழர் அண்மையில் நடத்திய பேரணிக்கு ஆதரவு தெரிவித்து அவுஸ்ரேலிய ஜனநாயகக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்பட்டுள்ளது.

சிறிலங்காவில் இடம்பெறும் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர அவுஸ்ரேலிய அரசை உதவக்கோரி இப்பேரணி நடைபெற்றது.

ஐக்கிய திருச்சபையின் சமூகப் பொறுப்பு மற்றும் நீதி ஆணைக்குழுவின்பணிப்பாளர் வண. றிச்சேட் வூட்ரன் பேரணியின் முடிவில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரைநிகழ்த்தினார்.

பிரச்சினையை சிறிலங்கா அரசு பேச்சு வார்த்தையின் மூலம் தீர்க்க வேண்டும் நெருக்கடியை உண்டுபண்ணி தீர்வை அடையக் கூடாது எனவும் அவுஸ்திரேலிய அரசு ஐ. நா. சபையில் தீவிரமாகச் செயற்பட்டு சிறிலங்கா அரசு மீது அழுத்தத்தை ஏற்படுத்தி உடன் யுத்த நிறுத்தத்துக்கு உதவ வேண்டும். ஐ. நா. தலைமையில் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும்தெரிவிக்கப் பட்டுள்ளது.

சமீப காலங்களில் மனித உரிமைகள் மீறல் சிறிலங்காவில் அதிகரித்துள்ளது. அவுஸ்ரேலிய ஜனநாயக வாதிகள் இராணுவம் மேற்கொள்ளும் மனித உரிமைகள் மீறல்களுக்காக சிறிலங்கா அரசைக் கண்டிப்பதோடு அரசு அனைத்து மக்களின் மனித உரிமைகளையும் மதிக்கும்படி கோருகிறது.

யுத்தத்துக்கு ஒரு முடிவை ஏற்படுத்தி நிரந்தர சமாதானத்தைக் காண்பதற்கு அனைத்துத் தரப்பினரும் கூடி ஆக்கபூர்வமான எதிர் காலத்தை நிலை நாட்ட சமரசப் பேச்சுக்களை நடத்த வேண்டும். இதற்கான முதற் கட்ட நடவடிக்கையாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

சிறிலங்காவில் சுழற்சியாக இடம்பெறும் வன்செயலைஒரு முடிவுக்குக் கொண்டு வர அவுஸ்ரேலியா உட்பட அனைத்து நாடுகளும் முயற்சி எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### குழந்தைகள் வைத்தியம்

தீவக பாக்கியம் குழந்தைகள்- சிகிச்சை நிலையம் - K. K. S. வீதி மனோகராச் சந்திக்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலிருந்து 1- மைல் தொலைவிலுள்ளஇருபாலைச் சந்தியிலும் இயங்குகின்றது

(2246)

### மீன் தூள் விற்பனை

கோழித்தீன் மற்றும் கால்நடை உணவுகளுக்கு சேர்க்கப்படும் புரதச்சத்து நிறைந்த மீன் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள், உதயம் பல்பொருள் அங்காடி, ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(3962)

### பயிற்சி வகுப்புக்கள்

மனையியல் டிப்ளோமா வகுப்புக்கள், கேக்-ஐசிங் சிற்றுண்டி வகை, சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம், தையல் பூக்கள் செய்தல், வண்ணம் சாயமிடல், மற்றும் கைவேலைகள் நடைபெறும். திருமதி பவளம் சிவசுப்பிரமணியம் அனித்தா பாடசாலை பூநாறி மரத்தடி கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.

(சி/3992)

## விளையாட்டுப் போட்டி

குருநகர், புனித யாகப்பர் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2- மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு.அ.ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெறும்.

யாழ்.கோட்டபிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம்பிரதமவிருந்தினராகவும், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. ப. நடேசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பர். [21]

# சாராயம் சிகரட் விலைகள் வெள்ளி முதல் உயர்வு

(கொழும்பு)

சாராயம், சிகரெட், சீமெந்து குளிர்பான வகைகள் உட்பட பல பொருள்களின் விலைகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

சாராயத்தின் விலை போத்தல் ஒன்றுக்கு ஐந்து ரூபாவாலும், சிகரெட் ஒன்றின் விலை பத்துக் சதத்தினாலும், சீமெந்துப் பக்கற் ஒன்றின் விலை ஐந்து ரூபாவாலும், சோடா போன்ற குளிர்பானங்களின் விலை ஒரு ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டீசல் வாகனங்களின் இறக்குமதி மீதான வழமையான சுங்கத் தீர்வைக்கு புறம்பாக ஐம்பது சதவீத உற்பத்தி வரியும் விதிக்கப்படுகின்றது.

தேயிலை, இறப்பர் விலை வீழ்ச்சியில் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யவே இந்தப் பொருள்கள் மீதான விலையினை மேற்கொண்டதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

# படையினருக்கு பயிற்சி போதாதாம்

(கொழும்பு)

''ராணுவ வீரர்களுக்கு போதியளவு பயிற்சி அளிக்கப்படாததாலேயே தமிழ் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்படும் ஒளித்திருந்து தாக்கும் நடவடிக்கைகளுக்கு அவர்கள் பலியாக நேரிடுகிறது'' என்று சிறிலங்கா ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த திடீர் அதிர்ச்சி தாக்குதல் காரணமாக இந்த வருடம் மட்டும் இதுவரை குறைந்தது நூறு பேராவது பலியாகியுள்ளனர் என்றும் ராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ராணுவத்தில் சேருவோருக்கு ஆறுவாரகாலப் பயிற்சியே அளிக்கப்படுகிறது என்றும். படைவீரர் பற்றாக்குறையே இந்த பயிற்சிக் காலக் குறைப்புக்குக்காரணம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் படையினருக்கு மூன்று முதல் ஆறுமாத காலப்பயிற்சி அளிக்கப்பட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# வெற்றி தோல்வியின்றி போட்டி முடிவுற்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ் மத்திய கல்லூரிக்கும் கனகரெத்தினம் மகாவித்தியாலயத்திற்குமிடையில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை 28 ஆம் திகதியும், சனிக்கிழமை 29 ஆம் திகதியும் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. செல்வன் அகாஸ் 22 ஓட்டங்களையும், செல்வன் ரமேஸ் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

கனகரெத்தினம் மகாவித்தியாலய சார்பில் பந்து வீசிய செல்வன் நாதனும், செல்வன் பிரதீபனும், செல்வன் இராஜ்குமாரும் முறையே 3, 3, 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்கள் கனகரெத்தினம் வித்தியாலயம் தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 159 ஓட்டங்களைப் பெற்றது. செல்வன் பிரதீபன் மிகவும் சிறப்பாக விளையாடி 80 ஓட்டங்களைப் பெற்று கிரிக்கெட் ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

யாழ் மத்தியகல்லூரி சார்பில் செல்வன் பிரபாகரன் மிகவும் திறம்பட பந்து வீசி 5 விக்கட்டுக்களை கைப்பற்றினார்.

யாழ்மத்திய கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் 6 விக்கட் நஷ்டத்திற்கு 150 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.


இதில் செல்வன் ரமேஸ் 35 ஓட்டங்களையும் செல்வன் ரகுதாஸ் 31 ஓட்டங்களையும், செல்வன் அகாஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்,

செல்வன் நாதன் கனகரெத்தினம் வித்தியாலயம் கல்லூரி சார்பில் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார் கனகரெத்தினம் மகாவித்தியாலயம் தனது இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 30 ஓட்டங்கங்களைப்பெற்றது.

(42)

## ஓராண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம் 01 — 01 — 1972



வீர மரணம் 03 — 03 — 1991

### வீரவேங்கை மலையான்

(வேதநாயகம் அன்ரனி யேசுதாசன்)

(ஊறணி, காங்கேசன்துறை)

காலம் பல இருந்தும்
காலன் உன்னைப் பறித்து விட்டானே
காண்போமா இனிநாம் எம் கனியமுதை
வேழத்தைக் கொன்று அழித்து
வெற்றிகண்ட வீரவேங்கை - மலையானென
மேதினியில் நின் புகழ்பாட
வென்றிடும் தமிழீழம் மிக விரைவில்!

இவரின் ஆன்ம சாந்திக்காக மாரீசன்கூடல் புனித சுயித்தார் ஆலயத்தில் இன்றுபி. ப 4 மணிக்கு இரங்கல் பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர் சகபோராளிகள் அனைவரையும் பங்கு பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய், தந்தை, சகோதரிகள்.

(2255)

## நினைவு கூருகின்றோம்

### 1992-03-03

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி/ கனகராயன்குளம், கரடிப்போக்குச்சந்தி பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

நயினாதீவில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 7 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு ஆரையம்பதிப்பகுதியில் தேச விரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**கௌசிகன்** [கனகசபை பிறேம்குமார் ஆரையம்பதி மட்டக்களப்பு]

திருக்கோணமலை, சாம்பல்தீவு இடம்பெயர்ந்தோர் முகாமில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 14 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பரந்தனில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய- யாழ். மாவட்டத் தளபதி-

**லெப். கேணல் இம்ரான்** [சங்கரப்பிள்ளை சதானந்தன் - சிறீகரன் வீதி, கொக்குவில்)

**கப்டன் அனஸ் ராஜன்** [நடராசா பிறேமானந்- வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கு]

**லெப். சூரியகுமார்** [இரங்கசாமி துளசிதாஸ் - கொண்டக்கட்டை, வல்வெட்டித்துறை)

இதே சம்பவத்தின்போது சயனைட் உட் கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். குணசீலன்** [இரத்தினம் முருகதாஸ் - வள்ளித்தோட்டம், தம்பசிட்டி, பருத்தித்துறை]

1989 ஆம் ஆண்டு நாயாறில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**ஜஸ்ரின்/ சேவியர்** [தில்லையம்பலம் பற்குணராசா- 2 -ம் பண்ணை, செட்டிகுளம்)

**2 -ம் லெப். கஸ்ரோ** [கணேசன் சந்திரமோகன் - வட்டக்கச்சி, கிளிநொச்சி]

**மேஜர் அரி** [கார்த்திகேசு பிறேமசிறி- வத்திராயன் வடக்கு, தாளையடி]

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**மலையான்** (வேதநாயகம் அன்ரனி யேசுதாஸ் - ஊறணி, காங்கேசன்துறை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3991)

# ராஜீவ்காந்தி கொலை விசாரணை; வாழப்பாடி தர்ம சங்கடம்

ராஜீவ் காந்தி கொலை குறித்து ஆராய்ந்து வந்த சி.பி.ஐ.யின் விசாரணையில், அரசியல் தலையீடுகள் இருந்ததற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்திருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கொலை குறித்து ஆராய்ந்த சி.பி.ஐ.யின் விசேட ஆணைக்குழு விசாரணை முடிந்து விட்டது என்று தெரிவித்துள்ள நிலையிலேயே இக் குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கொலை நடந்த சிறிபெரம்புதூரில் போதிய பாதுகாப்பு இருந்ததா என்பதை நீதிபதி வர்மா தலைமையிலான விசாரணைக்குழு டில்லியில் விசாரித்து வருகிறது.

இந்த ஆணைக்குழுவின் முன்னால் பலர் சாட்சியமளித்தும் வருகின்றனர். சென்ற மாதம் வர்மா ஆணைக் குழுவிடம் அரக்கோணம் மகளிர் காங்கிரசைச் சேர்ந்த குமுதவல்லி அளித்த சாட்சியத்திற்குப் பின்னரே சி.பி.ஐ மீது குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன.

வாக்குமூலம் கொடுத்த குமுதவல்லி சம்பவத்தைநேரில் கண்டவர். 'கொலையாளி தணுவை அரக்கோணம் காங்கிரஸ் தலைவி லதா கண்ணன் தான் அழைத்து வந்தார் என்றும், லதா கண்ணனைக் கூட்டம் நடக்கவிருந்த இடத்திற்கு காரில் அழைத்து வந்தது மரகதம் சந்திரசேகரின் மகள் லதா பிரியகுமார் தான். மேலும், ராஜீவ் கொலை செய்யப்பட்டவுடனே மரகதம் சந்திரசேகர் தன் மகனுடன் காரில் வேகமாகக் கிளம்பிப் போனார்..." என்று மரகதம் சந்திரசேகரைக் குற்றம் சாட்டுகின்ற வகையில் குமுதவல்லி நீண்ட வாக்குமூலம் அளித்தார்.

இதே நேரம் நீதிபதி எஸ், எஸ், வர்மாவும் அண்மையில் புதுடில்லியில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மரகதம் சந்திரசேகரைக் கண்டித்துள்ளார். 'எத்தனையோ முறை நீதிமன்றத்திற்கு ஆஜராகி வாக்குமூலம் அளிக்கும்படி அவர் கேட்கப்பட்டிருந்தும் இவர்வ வில்லை' என்று குறை கூறியுள்ளார்.

இது பற்றிய முழு விபரங்களும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி ஆதாவு பத்திரிகையில் வெளியானது.

குமுதவல்லியின் வாக்கு மூலம் பற்றி சி.பி.ஐ.யின் விசாரணையில் எந்தக் குறிப்பும் இதுவரை வெளிவரவில்லை.

இந்த நேரத்தில் நடுநிலை காங்கிரஸ்காரர் சி.பி.ஐ.யின் விசாரணையில் சந்தேகப்பட ஆரம்பித்தனர். மேலும் 'குமுதவல்லியின் வாக்குமூலத்தை, ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியிலுள்ள சதித்திட்டங்களை விசாரிக்கும் ஜெயின் ஆணைக் குழுவிற்கு அனுப்புவது பற்றி விரைவில் முடிவெடுக்கும்' என்றும் வர்மா ஆணைக்குழு அறிவித்தது.

இதே நேரம் 'குமுதவல்லியின் வாக்குமூலம் வாழப்பாடியின் ஏற்பாடு என்றும், மரகதம் சந்திரசேகரரைச் சிக்க வைக்க வாழப்பாடி குழு செய்த சதி என்றும்' ஒரு தரப்பு காங்கிரஸ்காரர் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இவ்வாறாக ராஜீவ் கொலை விசாரணையில் இந்திரா காங்கிரசின் உட் பிரச்சினைக்குள் சி. பி. ஐ. நன்றாக சிக்கியுள்ளது.

அத்துடன் சி.பி ஐ விசாரணையில் இருந்த பல குறைபாடுகளும் வெளிவரத் தொடங்கியதால் அது மேலும் சிக்கலில் மாட்டியுள்ளது.

சிவராசனுக்கு உடந்தையாக இருந்ததாக சென்னையைச் சேர்ந்த தாதி பத்மா' அவரது மகள் நளினி, மகன் பாக்கியநாதன் ஆகியோரை சி. பி. ஐ. கைது செய்து விசாரணை நடத்தியது தெரிந்ததே.

கடந்த மாதம் ராஜீவ் கொலை வழக்கை விசாரிக்கும் தனி செஷன்ஸ் கோர்ட்டில் பாக்கியநாதன் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார் அந்த மனுவில்,

'என்னைக் கைது செய்து மல்லிகைக்குக் கொண்டு போன சி. பி. ஐ. அதிகாரிகள் என்னைக் கடுமையாக அடித்தனர். அதைத் தொடர்ந்து அறுபது நாட்கள் காவலில் இருந்தபோது என்னைத் துன்புறுத்தினார்கள். போட்டோகிராபர் ஹரிபாபு பற்றி சி,பி,ஐ, என்னிடம் விசாரித்தது. ஹரிபாபு கடந்த ஆறு மாதங்களாகச் சத்தியமூர்த்தி பவனிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்திற்கு அடிக்கடி சென்று வாழப்பாடி ராமமூர்த்தியைச் சந்தித்து வந்தார் என்று சொன்னபோது வாயில் குத்தினார்கள். இ, காங்கிரஸார் பற்றி எதுவும் சொல்லாதே, தி.க., தி.மு.க. கட்சிக்காரர்களைப் பற்றி ஏதாவது சொல் என்று மிரட்டினார்கள்,

''மேலும் விசாரணையின் போது சிவராசனின் டயரியை என்னிடம் காட்டினார்கள். வாழப்பாடி ராமமூர்த்தி வீட்டுக்கு ஹரிபாபுவுடன் சிவராசன் சென்றது பற்றி அதில் எழுதியிருந்தது. மேலும், வாழப்பாடி ராமமூர்த்தியுடன் சிவராசன் படம் எடுத்துக் கொண்டதாகவும் கூட டயரியில் எழுதப்பட்டிருந்தது. என்னை மிரட்டிக் கட்டாயப்படுத்தி, ஒரு தாளில் எழுதிக் கொடுத்ததை படிக்கச் சொல்லி வீடியோவில் பதிவு செய்தனர். என் சம்பந்தமான ஆவணங்களை பெ லிசார் கோட்டில் தாக்கல் செய்தால் அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது'' என்று பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

பாக்கிய நாதனின் இந்த மனு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. வழக்கமாகத் தன் மீதான குற்றச் சாட்டுக்களுக்கு ஆணித்தரமாக மறுப்பளிக்கும் வாழப்பாடி ராமமூர்த்தி, சிவராசன் தன்னுடன் படம் எடுத்துக் கொண்டது பற்றி தனக்கு நினைவில்லை என்று பலவீனமான குரலில் மறுத்துள்ளார்.

இது குறித்து வாழப்பாடி தரப்பில் ஆத்திரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ''உண்மையில் வாழப்பாடி மீதான இந்த வாக்கு மூலம் மத்திய ராஜாங்க அமைச்சர் மார்கரெட் ஆல்வாவின் தூண்டுதலால் சி. பி. ஐ வேண்டுமென்றே கிளப்பிவிட்டிருக்கிறது..'' என்று குற்றஞ் சாட்டியுள்ளனர். மார்கரெட் ஆல்வாவின் துறையைச் சேர்ந்ததே சி.பி.ஐ ஆகும்.

> இ. காங்கிரஸார் பற்றி எதுவும் சொல்லாதே. திராவிடர் கழகம் அல்லது திராவிட முன்னேற்றக் கழகக் காரர்களைப் பற்றி ஏதாவது சொல் என்று மிரட்டினார்கள் சி. பி. ஐ. அதிகாரிகள் என்கிறார் தற்போது தடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாக்கியநாதன்.
>
> ராஜீவ்காந்தி கொலை பற்றி விசாரணை நடத்தி வரும் சி. பி.ஐயின் விசாரணையில் அரசியல்தலையீடுகள் இருந்ததற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்திருப்பதாக அண்மையில் தகவல்கள் வெளிவந்துள்ளன.
>
> - நன்றி: ஜூனியர் விகடன்

சிறிபெரம்புதூருக்கு ராஜீவ் வந்த விடயத்தில் வாழப்பாடிக்கும் மார்கரெட் ஆல்வாவுக்கும் இடையில் ஒரு மோதலே நடக்கிறது

வர்மா ஆணைக் குழுவிற்கு வாழப்பாடி கொடுத்த வாக்கு மூலத்தில் ''சிறி பெரம் புதூரில் ராஜீவ் கூட்டம் வேண்டாமென்று சொல்லியும் மார்கரெட் ஆல்வா என் பேச்சைக் கேட்கவில்லை. அவர்தான் ராஜீவ் கூட்டத்தைத் தீர்மானித்தார்'' என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ராஜீவ் கொலை விஷயத்தில் வாழப்பாடியை சி.பி.ஐ: விசாரித்தார் என்பதைத் தெரிந்து கொள்வதில் இப்போது மார்கரெட் ஆல்வா அதிக ஆவல் காட்டுகின்றாராம்.

இதன் விளைவே சி.பி.ஐ:யில் வாழப்பாடி பற்றிய புகுத்தல் என்றும் வாழப்பாடி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் டெல்லியைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர்களும் ''வாழப்பாடியைப் பற்றி சி.பி.ஐ. என்ன தெரிந்து கொண்டிருந்தாலும் அதை மக்கள் முன் மறைக்காமல் வைக்க வேண்டுமென்று மார்கரெட் வற்புறுத்துகிறார்'' என்று குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறாக காங்கிரஸ் தரப்பில் வாழப்பாடிக்கு எதிராகபல குரல்கள் எழும்புகின்றன.

'தி.மு.க. விலிருந்து விலகி காங்கிரசில் சேர்ந்தவர் லதா கண்ணன். சேர்ந்த ஒரு மாதத்துக்குள்ளேயே அவர் அரக்கோணம் காங்கிரஸ் கட்சியின் தலைவராக்கப்பட்டார். லதா கண்ணனுக்காக சிபாரிசு செய்தவர் வாழப்பாடியின் ஆதரவாளரான வேணு கோபால். மேலும், ராஜீவ் கொலை வழக்கில் கைதாகியிருக்கும் 'சுபா' சுந்தரம் காங்கிரசுக்காகத் தேர்தல் பிரசாரத்துக்கு வீடியோ எடுத்தவர். சத்திய மூர்த்திபவனிலிருக்கும் வாழப்பாடியின் படத்தை எடுத்தவர் 'சுபா' சுந்தரம் தான். ராஜீவ் கொலைக்குப் பிறகு படத்திலிருந்த சுபா' சுந்தரம் பெயர் மறைக்கப்பட்டது. இவையெல்லாம் பற்றி கூட சி.பி.ஐ. விசாரிக்க வேண்டுமென்று 'டெல்லிக்கு மனு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் சில காங்கிரஸ்காரர்கள்.

## கொழுத்த ஊதியத்துடன்

# சோவியத் விஞ்ஞானிகள் ஈராக்கிய பணியில்

(பேர்லின்)

முன்னாள் சோவியத் குடியரசுகளின் 50-க்கு மேற்பட்ட அணுசக்தி விஞ்ஞானிகளை ஈராக் வேலைக்கு அமர்த்திக் கொண்டுள்ளதாக பேர்லின் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் டாலர்களை சம்பளமாக வழங்க ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைன் இணங்கியுள்ளதாகவும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் இவர்கள் 50 டாலர்களை மட்டுமே மாத ஊதியமாகப் பெற்றனர் எனவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

இதேவேளை ஈராக் தன் வசமுள்ள 'ஸ்கட் ஏவுகணைகள்' தயாரிக்கப் பயன்படும் உபகரணங்களை அழித்துவிட ஐ.நா வால் விதிக்கப்பட்ட காலக்கெடு கடந்த 28 ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. ஆனால் இந்த உபகரணங்களை ஈராக் தனது அமைதித் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் எனத் தெரிவித்துள்ளதுடன் அவற்றை அழித்து விடவும் மறுத்து வருகிறது.

## ஐ.நா.வின் தீர்மானம்

# மீள் பரிசீலனை செய்ய ஈராக் அரசு கோரிக்கை

இராணுவ சாதனங்கள் என்று சந்தேகிக்கப்படும் சாதனங்களை அழிக்க வேண்டும் என்ற ஐ.நாவின் கோரிக்கையை உலக அமைப்பு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ஈராக் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது.

சந்தேகத்திற்குரிய மேற்படி சாதனங்கள் சிவில்லியன் உபயோகத்திற்குரியதென்று ஈராக்கிய அமைச்சர் ஐ.நா. விற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த சாதனங்கள் ஸ்கட் ரக ஏவுகணைகளை உற்பத்தி செய்வதற்கு முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது என ஐ.நா.கண்காணிப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தஇராணுவசாதனங்களை அழிக்கும் விடயம் தொடர்பான பிரச்சினையை ஐ நா. பந்தோபஸ்து சபை விரிவாக விவாதிக்க உள்ளது

# ஐ நாவில் சான்.மெரினோ

(நியூயோர்க்)

23,000 மக்களைக் கொண்ட உலகின் மிகப் பழைய குடியரசான சான் மெரினோவுக்கு, ஐ. நாவில் அங்கத்துவம் வழங்க பாதுகாப்புச் சபை வாக்கெடுப்பின்றியே தீர்மானித்துள்ளது. கிறிஸ்துவுக்குப் பின் 350- ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட சான் மெரினோ, இத்தாலிக் கரையில் அமைந்துள்ளது. 23.6 சதுர மைல்களைக் கொண்ட இந்த நாடு நியூயோர்க் நகரத்தின் பத்தில் ஒருபங்கு பரப்பைக் கொண்டதாகும்.

# ஐ.நாவின் அங்கத்துவம் 175ஆகஅதிகரிப்பு

இந்த ஆண்டு முதல் ஐ. நாவின் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை 175 ஆக அதிகரித்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் சோவியத் குடியரசுகளான கஸாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெக்கிஸ்தான், கிர்கிஸ்தான், ஆர்மேனியா. மொல்டோவா, துர்க்மெனிஸ்தான், அசர்பைஜான் ஆகிய நாடுகளும் ஐ. நாவில் அங்கீகாரம் பெற்றுள்ளன. முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஜோர்ஜியா மட்டுமே இதுவரை ஐ.நாவின் அங்கீகாரம் பெறவில்லை.

# ஈராக் ஏற்காவிடில் பாதிப்பு ஏற்படும்

(லண்டன்)

ஐ. நா. சபையின் தீர்மானங்களை ஏற்று அதன்படி நடந்து கொள்வதற்கு ஈராக் தவறுமேயானால் அதன் விளைவுகளை ஈராக் சமாளிக்க வேண்டியிருக்கும் என அமெரிக்க வெளியுறவுத்துறை இணை அமைச்சரான ஈகிள்பேகர் எச்சரித்துள்ளார்

பி.பி.ஸி.க்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே ஈகிள்பேகர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்புச்சபையின் இப்போதுள்ள தீர்மானங்கள், தேவைப்பட்டால் பாக்தாத்திற்கு எதிராய் புதியபடைபல பிரயோகத்தை அனுமதிக்கின்றன என்றும், அவர் தெரிவித்துள்ளார்

படைபலம் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருப்பதாக பிரித்தானிய வெளியுறவுத் துறை அமைச்சர் டக்ளஸ் ஹேட்டும் எச்சரித்துள்ளார்.

# ஒரு சில யோசனைகளை தேசியமுன்னணி எதிர்க்கும்

(பம்பாய்)

இந்தியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மத்திய வரவுசெலவுத்திட்டத்தின் ஒரு சில யோசனைகளை தேசிய முன்னணியும், இடதுசாரிக்கட்சிகளும் எதிர்க்கப் போகின்றன என்று ஜனதாதளத் தலைவர் எஸ். ஆர். பொம்மை தெரிவித்துள்ளார்.

பம்பாயில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய எஸ். ஆர். பொம்மை இதனைத் தெரிவித்தார்.

# கிராமப் பெண்கள் மீது பொலிசார் தடியடி

தேனீ-கம்பம் வீதியில் இரு கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் மறியல் செய்தபோது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர். இதனால் சுமார் பதினைந்து பெண்கள் காயமுற்றனர்

பூப்பாத்திபுரம், பிள்ளையார் பட்டியாகிய இருகிராமங்களைச் சேர்ந்த பெண்கள் வெறுங்குடங்களோடு குடிநீர் கேட்டு வீதியை மறித்து மறியல் செய்தபோது இந்தச் சம்பவம் நடைபெற்றது.

சாலை மறியலில் ஈடுபட்டதற்காக சுமார் நூறு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க

## மட்டக்களப்பு பகுதியில் 'மினிக்' காணிக் கச்சேரிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மக்களின் காணி சம்பந்தமான பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு வரும் 5ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை மினிக் கச்சேரிகள் செயற்படவுள்ளன.

இதில், வடக்கு - கிழக்கு மாகாண காணித் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொள்வர் என மாவட்டக் காணி அதிகாரியும், உதவிக் காணி ஆணையாளருமான க. குருநாதன் தெரிவித்தார்.

மெய்வல்லுநர்

## போட்டி

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த வியாழனன்று வருடாந்த மெய்வல்லுநர்போட்டி இடம் பெற்றது. பிரதம விருந்தினராக யாழ். செயலக திட்டமிடல்பணிப்பாளர் எஸ் பத்மநாதன் கலந்துகொண்டார். அத்துடன் இப்போட்டியில் பெருந்தொகையான பழைய மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

இராணுவத்தால்

## கடுமையான பாதிப்பு; நிவாரணத்திற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட மேலும்ஒரு தொகுதியினருக்கு நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டுவருகிறது.

இக்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக சுமார் 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதி இவ்வாறு கடுமையான பாதிப்பிற்குள்ளானவர்களது கொடுப்பனவுகளுக்கு பயன் படுத்தப்பட உள்ளது. (க)

# மூளாய்சிறுவர்பாடசாலைஆசிரியர்பயிற்சிநிலைய

# இறுதிப் பரீட்சை முடிவு விபரம் - 1992

## தலைமைச் செயலகம் மூளாய்

### விசேட சித்தி

01. செல்வி சு. மோகனாம்பிகை
02. ,, க. இலங்காதேவி
03. ,, ம. இமாக்குலேற்றா
04. ,, அ. கொலஸ்ரிக்கா
05. ,, க. சந்திரரஜனி
06. ,, க. சாந்தினி
07. சு. சூரியகாந்தி

### சாதாரண சித்தி

08. செல்வி வே. ஜெயசக்தி
09. ,, செ. கிருபாசக்தி
10. ,, கா. சரோஜினிதேவி
11. திருமதி போ. வினோதினி
12. செல்வி கு சுதா
13. ,, கு தர்மலோசனா
14. ,, ப மஞ்சுளாதேவி
15. ,, கி. இராஜகீதம்
16. ,, இ ஜெயரஞ்சினி
17. ,, சீ சிறிகாந்திமதி
18. ,, க. கமலேஸ்வரி
19. ,, இ. மரியபுஷ்பம்
20. ,, வே. திருமகள்
21. ,, சி. சேற்றுட்டம்மா
22. ,, ச. நசேந்தினி
23. ,, யோ மரியலின்சிஜாந்தினி
24. ,, இ. கிரிஷாந்தி
25. ,, இ அஞ்சலதேவி
26. ,, க. வசனேஸ்வரி
27. ,, க. மாலினி
28. ,, த. வினிபிறிடா
29. ,, செ பியற்றீஸ் பிறேமளா
30. ,, சொ. செந்தாமரைச் செல்வி
31. ,, மா. பிறேமறஞ்சினி
32. ,, சி. நவமலர்
33. ,, சே ஸ்டாலினி
34. ,, த. சத்தியவாணி
35. ,, ச. மங்கையற்கரசி
36. ,, வே. கோகிலராணி
37. திருமதி ச. சிவனேஸ்வரி
38. செல்வி க. நகுலேஸ்வரி
39. ,, த. தயாளினி
40. ,, தி. சுதாநிதி
41. ,, ஆ செல்வராணி
42. ,, மா. இரத்தினேஸ்வரி
43. ,, ம. மரியநிர்மலா

## துணை நிலையம் யாழ்ப்பாணம்

### விசேடசித்தி

44 திருமதி கி சாந்தினி
45 ,, வி. நாகேஸ்வரி

### சாதாரணசித்தி

46 செல்வி ச. உதயகுமாரி
47 ,, கு. நாகரோகினி
48 ,, சா. ஜெயராணி
49 திருமதி து. இராசலட்சுமி
50 செல்வி ச. சிவசர்மி
51 திருமதி பா. ஜெயந்திராணி
52 செல்வி பொ. சந்திரறோகினி
53 ,, பா தயாளினி
54 ,, ஆ. அஜந்தா
55 ,, த. நந்தினி
56 திருமதி சி. அருள்வேள்நாயகி
57 செல்வி மு. காஞ்சனாதேவி
58 ,, த. தனறஞ்சிதம்
59 ,, சு. சுவேந்தினி
60 திருமதி சி. செல்வி
61 செல்வி பா. செல்வரஞ்சினி
62 ,, ப. அற்புதராணி
63 ,, பா. விஜோதிநிலா
64 ,, மா. ஜெயந்தினி
65 ,, மா. யசோதினி
66 செல்வி கி. ஈஸ்வரி
67 ,, ந. தயாளினி
68 ,, ந. கிருஷ்ணவேணி
69 ,, தே. யூயின்லினிஸ்ரா
70 ,, ப. சுவெற்லானா
71 ,, க. றூபிற்ஜெனிசா
72 ,, ப வாசினி
73 ,, இ. புளோறஞ்சி
74 ,, க. புஸ்பரதி
75 ,, தா. ஜெயராணி
76 ,, த. அமுதா
77 ,, த. வனிதா
78 ,, சோ. ஜெயந்தினி
79 ,, சு. ஜெகதாம்பாள்
80 ,, கோ. குணவதி
81 ,, பே. சௌசல்யா
82 ,, போ. சுபாஜினி
83 ,, தா. யசிந்தா
84 ,, ச. சரசமலா
85 ,, வ. பிறேசிலிட்
86 ,, சோ. சுகந்தி
87 ,, அ. கோ. கோ. சதனா
88 ,, தி. மோகனமலர்
89 ,, வெ. வசந்தி
90 ,, வி. மாலினி
91 ,, கு. யசோதரா
92 ,, ப. சரஸ்வதி
93 ,, க. சிவமலர்
94 ,, பா. ரஞ்சிதமலர்
95 ,, நா. பவானி
96 ,, கு. ஜோர்ஜினா
97 ,, இ. சுசிலாதேவி
98 ,, இ. ஜெனற்
99 ,, கு. அருந்ததிதேவி
100 ,, தி. வசந்தமாலா
101 ,, வே. கமலேஸ்வரி
102 ,, வி. ஜெயமாலா
103 ,, இ. வாஜினி
104 ,, தி. சந்திரிகா
105 ,, கு. கேதீஸ்வரி
106 ,, சி. அறிவரசி
107 ,, க. யசோதாதேவி
108 ,, க. கலைமகள்
109 ,, செ. செல்வத்தவம்
110 ,, செ. லீலாவதி
111 ,, ப. கமலாதேவி
112 ,, து. சாந்தினி
113 ,, க. சுயரசி
114 ,, க. வனிதா
115 ,, இ. இளந்திரை
116 செல்வி ச. சுமதி
117 ,, வே. நடேஸ்வரி
118 ,, பொ. லோகேஸ்வரி
119 ,, ச. அக்னெஸ்
120 ,, அ. இருதயநாயகி
121 ,, சு. சசிதேவி
122 ,, சோ தனலட்சுமி
123 ,, ம. பிறேமலதா
124 ,, ந அன்பரசி
125 ,, அ. சிறிபத்மினி
126 ,, அ. பற்றிஸ்ரா
127 ,, த. தேசராணி
128 ,, பா. மரீனா
129 ,, நா. கலாறஞ்சினி
130 ,, வி. நளாயினி
131 ,, இ. மாலினிதேவி
132 ,, கு. அருள்நாயகி

## துணை நிலையம் கரவெட்டி

### விசேட சித்தி

133. ,, து. இ. மகாலட்சுமி

### சாதாரண சித்தி

134 செல்வி க. பிறேமரூபதி
135 ,, செ. இராசமணி
136 ,, இ. இராஜகுமாரி
137 திருமதி ச. நிரஞ்சனி
138 செல்வி வே. இந்திராணி
139 செல்வி ந. லதா
140 திருமதி தி. வதனி
141 செல்வி சி. பாஸ்கரி
142 ,, செ. இராஜேஸ்வரி
143 ,, கோ. லதா
144 ,, சி. புனிதவதி
145 திருமதி அ. மோகனராணி
146 செல்வி கோ. நற்குணேஸ்வரி
147 ,, மு. அருந்ததி
148 ,, சி. இராசமணி
149 ,, வை. நாகேஸ்வரி
150 ,, க. மாமினி
151 ,, அ சந்திரமணி
152 ,, சி. சிவகலா
153 ,, ஐ பத்மாவதி
154 ,, ஜெ டெய்சி
155 ,, க. செல்வமாலா
156 ,, கு. புஸ்பராணி
157 ,, சி. இராசேஸ்வரி
158 ,, து. கவிதகலா
159 ,, பூ. கீதா
160 ,, சு. இராஜேஸ்வரி
161 ,, செ. பவானி
162 ,, க. நிர்மலா
163 ,, இ. இராஜகௌரி
164 ,, க ஜெயவதி
165 ,, க. இராஜசிலோசனா
166 ,, ப. த பிறிடா தேவலோஜினி
167 ,, பொ. பத்மினி

## துணை நிலையம் கிளிநொச்சி

### விசேட சித்தி

168 செல்வி ஜெ வனஜா
169 ,, ம சகுந்தலாதேவி

### சாதாரண சித்தி

170 செல்வி பா. வாசுகி
171 திருமதி க. நாகலட்சுமி
172 செல்வி சீ. கபாலீஸ்வரி
173 ,, கா அமிர்தவசனி
174 ,, ச. தேவசுந்தரி
175 ,, சி. செல்வராணி
176 திருமதி ந. சமலாதேவி
177 செல்வி க. விஜயபவானி
178 ,, பொ. புனிதவதி
179 ,, பே. புஸ்பராணி
180 ,, தி. வசந்தமாலா
181 ,, த. சீத்தாதேவி
182 ,, த கமலினி
183 ,, க. விஜயறாதா
184 ,, செ. சந்தானநாயகி
185 ,, ப. றாதிகா
186 ,, ச. திலகறஞ்சினி
187 ,, ஞா இந்திராணி
188 ,, செ. நித்தியாதேவி
189 ,, சு, தயாரஞ்சிதம்
190 ,, ச. யோகேஸ்வரி
191 ,, சி. செல்வராணி
192 ,, சி. தெய்வானைப் பிள்ளை
193 ,, சி. கமலாதேவி
194 ,, செ ஜெயாநிதி
195 ,, நா. சிவமணி
196 திருமதி சி நளாயினி
197 செல்வி ந உதயகுமாரி
198 ,, பா. சுபாஜினி
199 ,, சி. விக்னேஸ்வரி
200 ,, மா மல்லிகா
201 ,, க. கலாதேவி
202 திருமதி சி ஜெயக்கௌரி
203 செல்வி சி. நந்தரூபி
204 ,, இ. யாமினி
205 ,, இ. ரேணுகாதேவி
206 ,, சி. நிறைஞ்சலா
207 ,, செ. கலாவதி
208 ,, சி. புஸ்பராணி
209 ,, கு குணாளினி
210 செல்வி சி. இதயரூபி
211 ,, இ. இராசலட்சுமி
212 ,, சி பவனி
213 ,, ப. அமலோற்பவராணி
214 ,, த. புஸ்பமேரி
215 ,, ந. சர்வேஸ்வரி
216 ,, க. கலாதேவி
217 ,, க. நந்தினி
218 ,, பொ. பத்மாவதி
219 ,, தி. பத்மராணி
220 ,, க. கஜநிதி

## துணை நிலையம் முல்லைத்தீவு

### விசேட சித்தி

221 செல்வி பா. பாலேஸ்வரி
222 ,, க. கிருசாம்பிகை

### சாதாரண சித்தி

223 செல்வி அ. மேரிகலிஸ்ரா
224 ,, சி. ரங்காதேவி
225 ,, ம. தேவநேசம்
226 ,, அ. தவவாணிஸ்ரீ
227 ,, வி. கோமளாநிதி
228 ,, ச. சந்திராதேவி
229 ,, ந. திருப்பதி
230 ,, ப. இந்திராணி
231 ,, நா. சோமேஸ்வரி
232 ,, பா. மனோறஞ்சம்
233 ,, ப. மல்லிகாதேவி
234 செல்வி, ச. சாந்தினி தேவி
235 ,, நா. குணநாயகி
236 ,, த. யசோதா
237 ,, க. வசந்தாதேவி
238 ,, பா. மேரிசாந்தம்
239 ,, சி. அரியமலர்
240 ,, சு. ஸ்ரீமகாலட்சுமி
241 ,, சி. நகுலேஸ்வரி
212 ,, த. குசலகுமாரி
243 ,, செ. சசிகலா
244 ,, செ. சுகிர்தராணி
245 ,, நா. தயாநாயகி
246 ,, க. லலிதாதேவி
247 ,, க. சுவிதா
248 ,, அ. சுலோசனாதேவி
249 ,, வ. ஹேமலதா
250 ,, வ. மதிவதனா
251 ,, கு. ஜசிந்தா
252 ,, ப. அமலோற்பவநாயகி
253 ,, சி. பராசக்தி
254 ,, செ. சகாயராணி
255 ,, சி. சகுந்தலா

## சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி

**ஆரம்பம் 03.03.1992**

செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு. மேலதிக விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

விலாசம்:

1) சிறுவர்பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம், மூளாய்.

2) சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி துணை நிலையம். 92 ஐயனார் கோவிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(சி/3990)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

பெருந் தன்மையான மனிதன், தான் வழங்கும் உதவிகளைத் தன் ஞாபகத்திலும், தான் பெறும் உதவிகளைத் தன் இதயத்திலும் அருகிலும் வைத்திருப்பான்

— ஸர்ஃபுலிக் கிரெவில்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 03-03-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 035-2839 நிர்வாகபீடம் 2606

த.பெ. எண் 05

## வங்கி நெருக்கடி, அரசாங்கமே காரணம்

அரச வங்கிகளான இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றை நிர்வாக மீளமைப்புச் செய்வதான அரசாங்கத்தின் திட்டத்திற்கு வங்கி ஊழியர்களிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அரசாங்கம் வங்கி ஊழியர்களின் எச்சரிக்கைகளையும் மீறி மீளமைப்பு வேலைகளில் ஈடுபடுமானால், 22000 அங்கத்தவர்களைக் கொண்ட வங்கி ஊழியர் சங்கம் எதிர்க் கட்சிகளுடனும், ஏனைய தொழிற்சங்கங்களுடனும் இணைந்து அரசுக்கு எதிராக வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் என்றும் இதனால், பொருளாதாரம் வெகுவாகப் பாதிப்படையும் எனவும் வங்கி ஊழியர் சங்கம் எச்சரித்துள்ளது.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகிய இரு வங்கிகளும் கடன் மீளளிக்க முடியாத நிலைக்கு வந்துள்ளன. இதனால் இவ்வருட இறுதியில் இவ்விரு வங்கிகளும் சர்வதேச ரீதியில் வங்கித் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு விடும். இதற்கு வங்கிகளின் நிர்வாகம் மீளமைப்பு செய்யப்படுதல் அவசியம் என சிறிலங்கா பிரதம மந்திரியும், நிதி அமைச்சருமான டி.பி. விஜயதுங்கா அறிவித்ததைத் தொடர்ந்தே இப்பிரச்சினை எழுந்துள்ளது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் குற்றச்சாட்டை வங்கி ஊழியர்கள் திட்டவட்டமாக மறுத்துள்ளார்கள். அரசாங்கம் கூறுவது போன்று வங்கிகள் வங்குரோத்து நிலையை அடையவில்லை என்றும், அவ்வாறு வங்குரோத்து நிலை அடைந்திருந்தால், வங்கிக் கதவுகள் இழுத்து மூடப்பட வேண்டிய நிலை உருவாகியிருக்கும் எனவும் வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. மேலும், வங்கிகள் இரண்டிலும் பணக் கையிருப்பு ஒன்றும் மோசமடையவில்லை. வங்கி வேலைகள் வழமை போல் நடைபெறுகின்றன எனவும் தெரிவித்துள்ளது.

பொதுவாகவே இன்று உலகெங்கிலும் தனியார் மயமாக்கல் வெகு வேகமாகவே நடைபெற்று வருகின்றது. முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து இந்தியா வரை அதன் வேகம் விரைவாகவே உள்ளது. இந்த வரிசையில், சிறிலங்காவிலும், தனியார் மயமாக்கல் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இவ்வாறு தனியார் மயமாக்கல் நோக்கிச் சென்று கொண்டிருப்பதற்கு அரச நிறுவனங்களில் ஏற்பட்ட நிர்வாகத்திறமை இன்மை காரணம் எனப்பொதுவாகத்தெரிவிக்கப்படுகின்றது. சிறிலங்காவிலும் அவ்வாறே கூறப்படுகின்றது. ஆனால், சிறிலங்காவில் நிறுவனங்கள் நட்டமடைவதற்குநிர்வாகத்திறமை இன்மை காரணமல்ல ஆட்சியில் இருந்த அரசாங்கங்களும் அரசியல்வாதிகளுமே காரணம் ஒழிய, நிர்வாகத்திறமையின்மையோ அன்றி நிர்வாகிகளோ அல்ல.

இலங்கை வங்கியும், அரச வங்கியும் கொடுத்த கடன்களில் மீளமுடியாதவை 16 பில்லியன் ரூபாவைத் தாண்டியிருப்பதால் வங்கிகள் வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதாக அரசு தெரிவிக்கின்றது.

ஆனால் அரசவங்கிகளில் அளித்துள்ள மீளப்பெற முடியாதகடன்களில்பெரும்பாலானவை அரசாங்கத்தின் செயற்திட்டங்களுக்கும், கோலாகல வைபவங்களுக்கு நன்கொடையாகவும், அரசாங்க சார்பு பாரிய நிறுவனங்களுக்கு கடனாகவும். வழங்கப்பட்டவையே ஆகும். அரசாங்க சார்புடையோர்களுக்கு மட்டும் அரசவங்கிகளில் இருந்து 600 கோடி ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. அவை பின்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இவையே வங்கிகள் நெருக்கடிக்கு உள்ளானதற்குக்காரணமாகும். இதே போன்றேபெருந்தோட்டத்துறையிலும் ஏற்பட்ட பெரும் நட்டங்கள் நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் தலையீட்டினால் ஏற்பட்டனவாகும்.

இந்நிலையில், சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவிகள் இல்லாமல் இன்று பொருளாதாரத்தை இயக்க முடியாத நிலையில் அவற்றின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழிகள் சிறிலங்காவிற்கு இருப்பதாக இல்லை. ஆனால், இவ்வளவு பொருளாதார நெருக்கடிகளின் பின்பும், சிறிலங்கா அரசாங்கம் பெரும் பொருள் விரயமாகும் உள்நாட்டுப் போருக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கோ அன்றி பெரும் பொருட் செலவில் எடுக்கப்படும் விழாக்களையோ கொண்டாட்டங்களையோ நிறுத்துவதாக இல்லை. இந்நிலையில், அரசாங்கம் பெருந்தோட்டங்கள், வங்கிகள் என்பனவற்றில் நிர்வாக மீளமைப்புக்களைச் செய்வதினால் பொருளாதார நிலை சீர்திருந்திவிடப் போவதில்லை.

# மீண்டும் தனியார் வசமாகும் பெருந் தோட்டத்துறை

சிறிலங்கா அரசு தனது கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் போன்றவற்றை படிப்படியாக மக்கள் மயப்படுத்தல் என்ற மகுடம் சூட்டி தனியார் மயப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. தொலைத் தொடர்பு திணைக்களம், சிறிலங்கா டெலிகொம் கம்பனி என்ற பெயரில் ஏற்கனவே தனியார் கம்பெனியாக்கப்பட்டு விட்டதும். போக்குவரத்துச் சபையின் டிப்போக்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டு வருவதும் இதற்கு பொருத்தமான உதாரணங்களாகும், இந்த வரிசையில் இலங்கையின் மிகப்பெரும் தொழில்துறையான பெருந்தோட்ட தொழில் துறையையும் தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் செய்திகள் கடந்த நவம்பர் 21இல் முதன் முதலில் வெளியாகியது.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் அதிகமான பங்கைப் பெற்றுத் தரும் துறை பெருந்தோட்டத்துறையாகும்: சுமார் ஐந்நூறு பெருந்தோட்டங்களையும் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களையும் கொண்ட மிகப் பெரும் தொழில்துறையாக பெருந்தோட்டத்துறை விளங்குகின்றது. இங்கு பணியாற்றும் தொழிலாளர்களில் எண்பது சத விகிதத்திற்கும் அதிகமானோர் மலையகத் தமிழர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இலங்கையிலேயே மிகவும் அதிகமானோருக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் துறையாகவும் பெருந்தோட்டத்துறையே விளங்குகின்றது என்பதும் இங்கு கவனிக்கத் தக்கதாகும்:

மத்தியமாகாணத்தின் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும், சப்பிரகமுவாமாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்திலும், ஊவா மாகாணத்தின் பதுளை, மொனராகல மாவட்டங்களிலும் பெருந்தோட்டங்கள் பெருமளவுக்கு காணப்படுகின்றன. இவ்வாறு மூன்று மாகாணங்களின் கீழ்-வெவ்வேறு மாவட்ட எல்லைகளின் கீழ் மலையகம் பிரிக்கப்பட்டிருப்பதால் பெருந்தோட்டத்துறையின் தொழிலாளர்களாக இருக்கும் மலையகத் தமிழ் மக்கள் தமது ஒன்றுபட்ட ஒருங்கிணைந்த சக்தியை வெளிப்படுத்தும் வாய்ப்பு அற்றுப் போயிருக்கின்றது. அத்துடன் பல்லாண்டுகளாக அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களாகவும், இந்த மலையக மக்கள் இருந்துள்ளனர்.

### சிங்களமயமாகிய தேசிய மயம்

வெளிநாட்டுக் கம்பனிகளின் சொத்துக்களாக இருந்த தேயிலை, றப்பர் மற்றும் பெருந்தோட்டங்களை 19 1ஆம் ஆண்டில் பதவியிலிருந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேசியமயமாக்கியது. தனியார் கம்பெனிகளால் தேசிய செல்வம் கொள்ளையிடப்படுவதாகவும் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதாகவும் கூறி அவை தேசியமயமாக்கப்பட்டபோது, தொழிலாளர் வாழ்வில் நம்பிக்கை ஒளி தோன்றுமென எதிர்பார்க்கப்பட்டது. லயன் வாழ்வை விட்டொழித்து தோட்டங்கள் கிராமங்களாக மாறும் என்று ஒரு 'சிவப்புக் கனவு' தோற்றுவிக்கப்பட்டது.

ஆனால் தேசிய மயம் என்ற போர்வையில் சிங்கள மயம் ஆகியதுதான் நடந்த விடயமாகியது. தொழிலாளர்கள் பலர் பலவந்தமான நாடு கடத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், தோட்டங்களை விட்டு விரட்டப்பட்டதும், மாற்றுப் பயிர்ச் செய்கைத் திட்டத்தின் கீழ் தேயிலைத் தோட்டங்களில் மரக்கறிச் செய்கையை ஊக்குவிக்க சிங்களவர்கள் குடியேற்றப்பட்டதும் நடைபெற்றது. இது நாடறிந்த விடயம்

### அரசுக்கு நட்டம்

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தோட்டங்களை நிர்வகிப்பதற்காக மாதாந்தம் 400-500 மில்லியன் ரூபாவை இழக்க வேண்டியிருப்பதாகவும், கடந்த இருபது ஆண்டுகளில் 40-50 பில்லியன் ரூபா இதனால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்றில் அண்மையில் தெரிவித்துள்ளார்.

அதாவது அரச பெருந்தோட்டயாக்கம், ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் அதிகாரிகளின் நிர்வாகத்தின் மூலம் பெருந்தோட்டத் துறைகளைச் சரியாக நிர்வகிக்க முடியாமல் உள்ளது. இதனாலேயே அரசாங்கம் பெருந்தோட்டங்களை தனியார் துறையிடம் கொடுப்பது என்ற தீர்மானத்திற்கு வந்துள்ளது எனச் சொல்லப்படுகிறது.

தற்போது சர்வதேச ரீதியில் தேயிலையின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதையும் நட்டத்திற்கு ஒரு காரணமாக அரசு சொல்கிறது. ஆனாலும் இந்தியாவிலும், கென்யாவிலும் தேயிலை உற்பத்தித் தொழில் இன்னமும் இலாபகரமானதாகவே இருக்கின்றது. இங்கு மட்டும் இத்தொழில் நட்டமடைவதற்கு காரணம் உற்பத்திச் செலவு (நிர்வாகச் செலவினங்களையும் உள்ளடக்கி) தேயிலையின் சராசரி விலையை விட அதிகமாக இருப்பதுவேயாகும் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

### நிர்வாகம் தனியாரிடம்

தோட்டங்களின் உரிமையை அரசாங்கம் தொடர்ந்தும் கொண்டிருக்கும் எனவும், அதன் முகாமைத்துவப்பொறுப்பு மட்டுமே தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார். அதாவது தோட்டங்கள் அனைத்தும் தொடர்ந்தும் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

ஆனால்அதன் நிர்வாகத்தை மட்டும் உள்ளூர் தனியார் துறையினர் மேற்கொள்வர் எனவும் ஆர். பாஸ்கரலிங்கம் விளக்கமளித்துள்ளார்.

இதன்படி சிறந்த நிபுணத்துவமும், போதிய மூலதனமும் கொண்ட கம்பனிகளிடம் பெருந்தோட்ட நிர்வாகம் ஒப்படைக்கப்படவுள்ளது என்பது தெளிவாகிறது இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களின் மூலம் இந் நிர்வாகங்கள் கைமாற்றப்படவுள்ளன: இந்த ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகள் வலுவுடையதாகும். எனினும் உரிய காரணங்களுக்காக அதற்கு முன்னரே இடைநிறுத்திக் கொள்ளும் உரிமை அரசுக்கு உண்டு. உள்ளூர் நிபுணத்துவத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் கூட அரசின் அனுமதியோடு வெளிநாட்டு நிபுணர்களும் சேவைக்கு அழைக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக இருக்கும் ஐந்நூறு பெருந் தோட்டங்களில் சுமார் நானூற்றைம்பது பெருந்தோட்டங்கள் இருபத்திரண்டு அலகுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனியார் கம்பனியிடம் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்படவுள்ளது.

### பெருந்தோட்டங்களும் தொழிலாளர்களும்

பெருந் தோட்டத்துறையைப் பொறுத்த வரையில் தொழிலாளர்களுக்கும். நிர்வாகத்திற்குமான உறவு வெறுமனே வேலைகொடுப்போருக்கும் - கொள்வோருக்குமான உறவாக மட்டும் இருப்பதில்லை என்பது வெளிப்படை. தொழிலாளர்களின் குடியிருப்புகளான லயன்களும் தோட்டங்களின் எல்லைக்குள்ளேயே அடங்கியிருக்கின்றன. அதன் காரணமாக குடியிருப்பு பிரச்சினைகள் முதல் சுகாதாரம், குடிநீர், கல்வி, உட்பட அனைத்துப் பிரச்சினைகளிலும் நிர்வாகமே கவனம் செலுத்த வேண்டும். நாடு முழுவதிலும் எந்த ஆட்சி நடந்தாலும் ஒவ்வொரு தோட்டங்களிலும் தோட்டத் துரை எனப்படும் சுப்பிறின்டன்ட் ஆட்சிதான் அமுலில் இருக்கும். 1971 க்கு முன்பு இந்தத் தோட்டத் துரைமார்கள் கம்பெனிகளால் நியமிக்கப்பட்டார்கள். அதன் பின்பு இன்று வரை அரசினால் நியமிக்கப்படுகிறார்கள்.

தொழில் ரீதியான தகராறுகளுக்கு மட்டும் தொழிற்சங்கங்களினூடாக தொழிலாளர் நீதிமன்றம் வரை (Labour Court) செல்லக்கூடிய உரிமை தொழிலாளர்களுக்கு உண்டு. மாகாண சபையோ அல்லது மாவட்ட அரசாங்க அதிபரோ தொழிலாளர்களின் நலவுரிமைகளில் தலையிடுவதற்கு இன்று வரை எந்தச் சட்டத்திலும் இடமில்லை. அதாவது ஒவ்வொரு தோட்டமும் நிர்வாக ரீதியில் தனியலகுகளாகவே நீடிக்கின்றன. இன்னமும் சுருக்கமாக விபரித்தால் கிராம சேவையாளர் அல்லது உதவி அரசாங்க அதிபரின் சேவைகள் எதுவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அதற்குத் தோட்ட நிர்வாகம் அனுமதிப்பதும் இல்லை.

**இனியவன்**

### எதிர்காலம்

இந்த நிலையிலேயே பெருந்தோட்ட நிர்வாகத்தை மட்டும் தனியார் கம்பெனிகளின் வசம் ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் இத் தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட எதிர்க்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் வழமைபோல எதிர்த்துள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இது தொடர்பாக விடுத்த அறிக்கையில், தனியார் வசம் கையளிப்பது தொடர்ந்து நீடித்தால் எமது பொருளாதாரம் முற்றுமுழுதாக தனியார் வசமாகிவிடும் என்ற நியாயமான அச்சத்துடன், விஷமத்தனமான இனவாதப் போக்கையும் வெளிகாட்டியுள்ளது. இது இங்கு ஊன்றிக் கவனிக்கப்படவேண்டிய இன்னுமொரு விடயமாகும்.

அரச பெருந்தோட்டங்களை நிர்வகிப்பதில் தவறு ஏற்பட்டு இருப்பதாக இருபது ஆண்டு கால அனுபவத்தின் வெளிப்பாடாக அரசு இன்று ஏற்றுக் கொள்கின்றது. இன்று அரசு இழைக்கும் தவறுகளை ஏற்றுக் கொள்ள இன்னும் இருபதாண்டு காலம் பொறுத்திருக்க வேண்டுமா? எனனும் கேள்விக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

# இளைஞர் அணிக்கு முதன்மை?

# தி.மு.க. தலைமையில்மாற்றம்;

(சென்னை)

திராவிட முன்னேற்றக்கழகத்துக்குள் தலைமைப்பீடத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான சிந்தனை கட்சிக்குள் வலுத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களாக ஜெயலலிதா அரசின் கெடுபிடி நடவடிக்கைகளினாலும், தேர்தல் தோல்வியாலும் முடங்கிக் கிடந்த கட்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் இளைஞர்கள் கையில்பொறுப்பை ஒப்படைக்கும் எண்ணம் மூத்த தலைவர்கள் சிலரிடம் இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஜெயலலிதாவுக்கு எதிராக களத்தில் போராடுவதற்கு இளைஞர்கள் வசம் தலைமை தரப்பட வேண்டும் என்று இளைஞர் அணியும் வற்புறுத்தி வருகின்றது என்று சொல்லப்படுகிறது.

தலைவர், பொதுச் செயலாளர் போன்ற பதவிகளை இளைய தலைமுறைக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி ஓரளவு ஏற்றுக் கொண்டு விட்டதாகவும் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வை. கோபாலசாமி, ஸ்டாலின், முரசொலிமாறன், பருதி இளம்வழுதி ஆகியபுதிய இளைய தலைமுறைக்கு புதிய பொறுப்புக்கள் விரைவில் வழங்கப்படக் கூடும் என்று பேசிக் கொள்ளப்படுகிறது.

பொறுப்பை அடுத்த தலைமுறைக்கு ஒப்படைத்து விட்டு கட்சி ஆலோசகர் குழுவாக மூத்த தலைமை செயற்படக் கூடும்.

## காங்கேசன். துறை முகம் வெள்ளிக்கிழமை திறப்பு

(காங்கேசன்துறை)

அத்தியாவசிய உணவுப் பொருள்களை கையாள்வதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை துறைமுகம் திறக்கப்பட இருக்கிறது. முதற் கட்டமாக நான்கு லொறிகள் காங்கேசன் துறை இராணுவ காவல் அரண்வரை செல்ல உள்ளது. அங்கிருந்து இராணுவ சாரதிகள் மூலம் இந்த லொறிகள் களஞ்சியத்துக்கு எடுத்துச் செலலப்பட்டு பொருள்கள் ஏற்றப்படும். மீண்டும் இராணுவ காவல் அரணுக்கு லொறிகள் எடுத்துவரப்பட்டு ஒப்படைக்கப்படும். இவ்வாறான நடைமுறைப்படியே இத்துறைமுகத்தின் ஊடாக பொருள்கள் எடுத்துவரப்பட இருக்கிறது. (ச,ச)

## இளைஞர் கைது

(நமது நிருபர்)

தமிழீழ காவல் துறையைச் சேர்ந்த பெண் காவலருடன் சேட்டையிலீடுபட்ட இளைஞர் ஒருவர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள தமிழீழ காவல்துறை பணிமனையில் கடமையாற்றும் பெண் காவலருடனேயே அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் சேட்டையில் ஈடுபட்டபோது காவல்துறையினர் அவரைக் கைது செய்து தடுத்துள்ளனர். (ச, க)

## இந்திய - அசர்பைசான் இராஜீக உறவு

(பாக்கூ)

இந்தியாவும் அசர்பைசானும் தங்களுக்கிடையில், ராஜீயத் துறையிலான இணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு உடன்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

பாக்கூவில் இடம் பெற்ற சந்திப் பொன்றிலேயே இரு நாடுகளுக்கும் இடையில் இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையிலும் பெற்றோல் இரசாயனத்துறையிலும் அசர்பைசானுக்கு இந்தியா தொழில் நுட்ப உதவியையும்,

அசர்பைசான்இந்தியாவிற்கு எண்ணெய்வள ஏற்றுமதியைடும் செய்ய இந்த இரு நாடுகளும் உடன்பட்டுள்ளன.

## ஐரோப்பிய சமூக நாடுகள் அகதிகள்குறித்துபொதுமுடிவு

(பாரிஸ்)

ஐரோப்பிய சமூக அரசுகள் தமக்கிடையில் பல மாதங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பிறகு அகதிகள் தொடர்பாக தம்க்கிடையில் ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் அகதிகள் தொடர்பாக இந்த அரசுகள் கடுமைப் போக்கைக் கடைப்பிடிப்பதை கைவிட உள்ளன. இந்த நடைமுறைச் சலுகை மற்ற நாடுகளிலிருந்து ஐரோப்பிய சமூக நாடுகளில் குடியேறியிருக்கும் அகதிகள் தொடர்பாகவும் கடைப்பிடிக்கப்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஐரோப்பிய சமூக நாடுகள் அகதிகள் நுழையாமல் தமது எல்லைகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் தீர்மானித்துள்ளன.

ஐரோப்பிய சமூகநாடுகளில் மொத்தம் 5,00,000 அகதி அந்தஸ்துக் கோரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன. முன்னர் பொருளாதார அகதிகள் தங்குவதற்கு அனுமதிக்கப் பட்டனர் என்றும், வருங்காலத்தில் 'பொருளாதார அகதிகள்' திருப்பி அவரவர் நாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஒரு ஐரோப்பிய சமூக நாட்டில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட அகதிக்கு ஏனைய ஐரோப்பிய சமூக நாடுகளில் அங்கத்துவம் வழங்குவதில்லை என்றும் இந்த நாடுகள் தீர்மானித்துள்ளன.

### உலக கிண்ண கிரிக்கட்

## தென்னாபிரிக்கஅணியினை சிறிலங்கா அணி வென்றது

(வெலிங்டன்)

வெலிங்டனில் நேற்று இலங்கை கிரிக்கட் அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையே நடைபெற்ற உலகக் கிண்ண் கிரிக்கட் போட்டியில் இலங்கை அணி தென்னாபிரிக்க அணியை மூன்று விக்கெட்டுகளால் தோற்கடித்துள்ளது.

தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 195 ஓட்டங்களைஎடுத்தது இலங்கைஅணி 49.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 198 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

### யாழ். குடாவில்

## எளிமையாக நடைபெற்ற மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள சிவன் ஆலயங்களிலும் ஏனைய இடங்களிலும் நேற்று மகாசிவராத்திரி விழா எளிமையான முறையில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆலயங்களில் நான்கு சாமங்களுக்கும் அபிஷேகமும், ஆராதனைகளும் இடம்பெற்றன.

சில ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நூற்றுக் கணக்கான மக்கள் வெவ்வேறு இடங்களில் குழுமியிருந்து இரவு முழுவதும் கண் விழித்திருந்து ஆலய வழிபாட்டில் ஈடுபட்டதுடன் கலை நிகழ்ச்சிகளையும் கண்டுகளித்தனர். (க)

### பிரித்தானியாவில்

## பொதுத் தேர்தலை குழப்ப ஐ. ஆர். ஏ. திட்டம்

(டப்ளின்)

பிரித்தானியாவில் இந்த ஆண்டு நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலை சீர்குலைக்க திட்டமிட்டுள்ளதாக ஐரிஷ் விடுதலை இயக்கம் (ஐ. ஆர். ஏ.) அறிவித்துள்ளது.

டப்ளினில் ஐ. ஆர். ஏ. விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் லண்டனில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளுக்கு தாம் தான் பொறுப்பென்றும் ஐ. ஆர். ஏ. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வட அயர்லாந்தில் இருந்து பிரித்தானியாவை விரட்டியடிப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது ஐ.ஆர்.ஏ. என்பது தெரிந்ததே.

## வவுனியா விமானத்தளம் விஸ்தரிக்க நடவடிக்கை

வவுனியா விமானத் தளத்தை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலேயே இரண்டாவது பெரிய விமானத்தளமாக வவுனியா-தச்சன்குள விமானத்தளம் விஸ்தரிக்கப்படுமென்றும்,

இதற்கென சுற்றாடலில் உள்ள பல காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அகதிகளுக்கு

இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களது சுயவிருப்பமின்றி வலுக்கட்டாயமாகவும் ஆசை வார்த்தைகள் கூறியும் இலங்கைக்கு அழைத்து வரப்படுவதே மிகப்பெரிய மனித உரிமைமீறும் செயலென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் கருதுகிறது. அத்துடன் இந்திய அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் அரசியற் பின்னணிகளைக்கொண்ட குண்டர் கோஷ்டியினரால் தாக்குதலுக்குட்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் இம்மக்களுக்கு வேண்டிய உணவு, மருத்துவ, குடிநீர்வசதி போதியளவில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை என்பதும் மனிதஉரிமைகளைமீறும் செயல் எனவும் கருதப்படுகிறது.

அதேவேளை வலுக்கட்டாயமாக சுய விருப்பமின்றி இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட அகதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. பாதுகாப்பற்ற பிரதேசங்களில் கவனிப்பாரற்றநிலையில் கைவிடப்பட்டனர். இப்பகுதிகளில் நாடு திரும்பிய அகதிகள் இராணுவக் கெடுபிடிகளுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர். சிலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு மேற்படி இருநாடுகளிலும் தமிழ் அகதிகள் கடந்த காலங்களில் நடாத்தப்பட்ட விதம் தொடர்பான அறிக்கைகள் அவ்வப்போது இவ் ஸ்தாபனத்தின் ஜெனிவா தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு வந்திருக்கின்றது. அத்துடன் சிறிலங்கா அரசாங்கம் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட அகதிகளின் நலன்களைக் கவனிக்கும்படி மறைமுகமான கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

இதைத் தொடர்ந்து மேற்படி ஸ்தாபனத்தின் இந்த உயர் அதிகாரி நிலைமைகளை நேரடியாக அவதானிப்பதற்காகவும் இலங்கை, இந்திய அரசுகளுடன் அகதிகள் விடயம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காகவும் இவ்விரு நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். (க)

### வவுனியாவில்

குடியிருப்புகளை நோக்கி கடும் எறிகணைத் தாக்குதல்களை மேற் கொண்டது.

இதேவேளை புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்களின் சொத்துக்களை அழிப்பதிலும் கொள்ளையிடுவதிலும் ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வெளிவாரி

ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை யாழ். பல்கலைக் கழகம் ஏற்றுள்ளதென யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் சங்கத்தின் பொதுச்செயலாளருக்கு அறிவித்துள்ளது

### வீரவணக்கம்

யொருவர் மரணமடைந்துள்ளார்.

வீரவேங்கை சக்கரபாண்டியன் அல்லது மலரோன் (வேலாயுதபிள்ளை ஜெயக்குமார் - சுன்னாகம் தெற்கு, கொடிகாமம் என்பவரே விபத்து சாவு அடைந்தவராவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### தமிழ் ஆசிரியர்களுக்கு

## இந்தியத் தூதரகம் விசா வழங்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகளின் நடவடிக்கைகாரணமாகசார்க் பிராந்திய ஆசிரிய சம்மேளனங்கள் மாநாட்டில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு ஆசிரியர்களையும், மூன்று ஆசிரியைகளையும் கொண்ட சங்கத் தூதுக்குழுவிற்கு இந்தியத் தூதரகம் விசா வழங்க மறுத்து விட்டது.

## ஜெயந்தி விழா

சிறிராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 157 ஆவது ஜெயந்தி விழா வரும் வெள்ளிக்கிழமை 6ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயததில் நடைபெற உள்ளது.

பஜனை, பூசை, இசை விருந்து ஆகிய நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**விபுலானந்தரின் நூற்றாண்டு நினைவாக**

'யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்' என்ற நூல் சாளரம் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

(சி/3993)

**இதய அஞ்சலி**

**சத்தியநாதன் கதீஸ்வரன்**

இறுதிவரை எம்முடன் பணிபுரிந்து நேற்று (2-3-92) கைதடியில் ஏற்பட்ட திடீர்விபத்தில் இன்னுயிர் ஈர்ந்த மாணவ இயக்க உறுப்பினர் செல்வன் சத்தியநாதன் கதீஸ்வரன் (கைதடி வடக்கு,கைதடி) அவர்கட்கு எம் இதய அஞ்சலிகள்.

தென்மராட்சி 3 - 3 - 92

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

(சி-3994)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.